# ஜெயங்கொண்டம் நகராட்சி

| DATE OF MEETING OF THE COUNCIL | MCR NO | SERIAL NUMBER AND SUBJECT IN AGENDA | DECISION OF THE COUNCIL |
|---|---|---|---|
| | | **ஜெயங்கொண்டம் நகராட்சியில் 2024 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 11.11.2024 ஆம் தேதி திங்கள் கிழமை காலை 10.00 மணி அளவில் நடைபெற உள்ள சாதாரணக் கூட்டத்தின் நிகழ்ச்சி நிரல்**<br>**முன்னிலை :**<br>**நகர் மன்றத் தலைவர்,**<br>**ஜெயங்கொண்டம் நகராட்சி** | |
| 11.11.2024 | 346 | அரியலூர் மாவட்டம், உடையார்பாளையம் வட்டம், ஜெயங்கொண்டம் நகரம் கச்சேரி எண். 63ல் இல்லத்தில் வசிக்கும் திரு.வெற்றிகொண்டான் மகன் வெ.கருணாநிதி, என்பவருக்கு சொந்தமான ஜெயங்கொண்டம் நகராட்சிக்குட் பட்ட விருத்தாசலம் ரோட்டில் நத்தம் மனைவரி எண். 2858 கூட்டுப் பட்டாவில் புதிய நத்தம் சர்வே எண். 610/1B நீ.ஹெ.0.00.30 ஏர்ஸில் 15 ச.மீ இடத்தினை தான செட்டில் மெண்ட் பத்திரம் பதிவு செய்யப்பட்டு ஜெயங்கொண்டம் சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண். 1 புத்தகம் 2024ல் 3614 என்ற எண்ணில் திராவிட முன்னேற்ற கழக்கத்திற்காக அதன் பொதுச் செயலாளர் திரு.துரைசாமி அவர்களின் மகன் து.துரைமுருகன் அவர்களுக்காகவும், அதன் பின் அப்பதவி வகிப்பவர்களுக்கும் தான செட்டில் மெண்ட் மூலம் வழங்கப்பட்டுள்ள மேற்படி தனியாருக்கு சொந்தமான பட்டா நிலத்தில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவ சிலை அமைப்பதற்கு அனுமதி வழங்க நகராட்சி தீர்மானம் கோரி வரப்பெற்றுள்ள அரியலூர் மாவட்ட ஆட்சித்தலைவரின் ந.க.எண். சி2/6803/2024 நாள். 08.11.2024ம் தேதிய கடிதத்தில் கோரப்பட்டு இந்நகராட்சி மன்றம் தீர்மான எண்.345 நாள்.08.11.2024 ன் படி இந்நகராட்சி மன்றம் ஏகமனதாக அனுமதித்து தீர்மான நிறைவேற்றப்பட்டது.<br>தற்போது அரியலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் ந.க. சி2/6803/2024 நாள். 11.11.2024 கடித்ததில் அரியலூர் மாவட்டம், உடையார்பாளையம் வட்டம், ஜெயங்கொண்டம் நகரம், கச்சேரி ரோடு எண்.63 வசிக்கும் திரு.வெற்றிகொண்டான் மகன் வெ.கருணாநிதி என்பவருக்கு சொந்தமான ஜெயங்கொண்டம் நகராட்சிக்குட்பட்ட விருத்தாசலம் ரோட்டில் அமைந்துள்ள நத்தம் மனை வரி எண்.2858 புதிய நத்தம் சர்வே எண்.610/1B – ல் 0.00.30 ஏர்ஸில் 15 ச.மீ இடத்தில் | மன்றம் அனுமதி வழங்கலாம் |

| | | | |
|---|---|---|---|
| | | திராவிட முன்னேற்ற கழகத்திற்காக அதன் பொது செயலாளர் திரு.துரைசாமி அவர்களின் மகன் திரு.து.துரைமுருகன் அவர்களுக்காவும் அதன் பின் அப்பதவி வகிப்பவர்களுக்காகவும் சேர்த்து தானசெட்டில்மெண்ட் பெற்றுள்ள பட்டா நிலத்தில் முத்தமிழ் அறிஞர் கலைஞரின் திரு உருவசிலை அமைப்பதற்கு அனுமதி கோரியதன் பேரில் மேற்படி புல எண்.610/1B – ஆனது 610/1B1 மற்றும் 610/1B2 என உட்பிரிவு செய்யப்பட்டு 610/1B2 – ல் 15 ச.மீ இடத்தில் முத்தமிழ் அறிஞர் கலைஞரின் திரு உருவசிலை அமைப்பதற்கு அரசுக்கு பரிந்துரை செய்து 08.11.2024 – ல் அறிக்கை அனுப்பட்டது எனவும், இந்நிலையில் ஏற்கனவே அனுமதி கோரிய இடத்தை யொட்டி வடபுறம் உள்ள நத்தம் சர்வே எண்.610/1B1 – ல் மீதமுள்ள 15 ச.மீ இடமானது ஜெயங்கொண்டம் சார்பதிவாளர் அலுவலக ஆவண எண்.3632/2024 நாள்.11.11.2024 – இன்படி தானசெட்டில்மெண்ட் பெறப்பட்டு அதன் பேரில் ஏற்கனவே தானம் பெறப்பட்ட புல எண்.610/1B2 மற்றும் தற்போது தானம் பெற்றுள்ள புல எண்.610/1B1 ஆகிய இரண்டிலும் சேர்ந்து வைப்பதற்கு தற்போது அனுமதி வழங்க கோரப்பட்டுள்ளது என்றும் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டு.<br>தற்போது ஏற்கனவே சிலை வைப்பதற்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ள புல எண்.610/1B2ற்கு அருகில் உள்ள புல எண்.610/1B1 இடத்தையும் சேர்த்து சிலை அமைப்பற்கு அனுமதி வழங்க மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு.**<br>மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம். .<br><br>ந.க.எண். 3539/2024/எப்1 | |

**ஆணையர்,**
**ஜெயங்கொண்டம் நகராட்சி.**